# தமிழ்ப் பிரதேசத்தில் குடியேற்றத் திட்டங்களும் அவற்றின் அரசியல் பரிமாணங்களும்

சந்தான்பிள்ளை சகாயசீலன்

இலங்கை இரு தேசங்களாகப் பிளவுபட்டு இருந்ததுடன் மூன்று இராச்சியங்களாகவும் காணப்பட்டன. இலங்கைத் தமிழர் வடக்கு கிழக்குப் பிரதேசங்களை பூர்வீகத்தாயகமாகக் கொண்டு தனியான தேசத்தவர்களாக வாழ்ந்து வந்தனர்.[1] 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையை போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் கைப்பற்றி இப் பிரிவுகளை மூன்று இராட்சியங்களாக வேறாக நிர்வகித்து வந்தனர். குறிப்பாக ஒல்லாந்தர் தமது ஆட்சிக் காலத்தில் தமிழ்ப் பிரதேசங்களை தனியான நிர்வாக முறைமைக்குட்படுத்தியுள்ளனர்.[2] மேலும் ஒல்லாந்தர் காலத்தில் தமிழர் வேறான மொழி, கலாசாரம், பூர்வீகப் பிரதேசத்தை யுடையவர்கள் என்றும் இப்பிரதேசங்களை நிர்வகிப்பதற்கான சொத்துரிமை, விவாகம், முதிசம் போன்றவை தொடர்பாக நீண்ட பாரம்பரியங்களைக் கொண்டிருந்தனர்.[3] தமிழர்கள் வரலாற்று ரீதியாகவும், புவியல் அமைவிடத்தினாலும் தனியான எல்லாவகையிலும் வேறுபட்ட மொழி, கலாச்சாரப் பண்பாட்டம்சங்களைக் கொண்ட தேசிய இனமாக வடக்கு கிழக்குப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றனர் என்பதில் இரு வேறுபட்ட கருத்துக்கருக்கு இடமில்லை.

பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றிய போது நாட்டை இனரீதியாகப் பிரித்து வைத்திருப்பதை விரும்பவில்லை. இதனால் தனித்தனியான நிர்வாக முறைகளை நீக்கி 1833 ஆம் ஆண்டு கோல்புறூக் - கமறன் சீர் திருத்தத்துடன் அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட ஒற்றையாட்சி முறையும் அதன் கீழ் ஒரே நிர்வாக முறையும் அறிமுகப்படுத்தினர்.[4] இதனால் ஒவ்வொரு இனங்களும் தமது சொந்தப் பிரதேசங்களில் தனித்துவமாக வாழும் நிலையை இழந்ததோடு, பிரித்தானியரால் அறிமுகப் படுத்தப்பட்ட வர்த்தக முயற்சிகள், நிர்வாகமையம், வர்த்தகமையம் இவைகள் அனைத்தும் இலங்கையின் ஈரவலயம் என அழைக்கப்படுகின்ற தென்மேற்குப் பகுதியில் அமைந்திருந்தது. தமிழர்கள் தாம் பெற்ற ஆங்கில அறிவினால் இலங்கையின் பல பாகங்களிலும் அரச பணியாளர்களாக நியமனம் பெற்றனர். இதனால் தென் இலங்கையை நோக்கிய இடப்பெயர்வு காணப்பட்டது என்பதில் வியப்பில்லை.

கைத்தொழில் புரட்சியின் பின் ஏற்பட்ட நவீனமயமாக்கல் நடவடிக்கைகளினால் இனத்துவ சமூகங்களில் தோற்றம் பெற்ற உயர் குழாத்தினர் தமது அரசியல் அதிகாரங்கள், பொருளாதார நன்மைகள், சமூக அந்தஸ்து போன்றவற்றைப் பேணிக் கொள்வதற்கு பல்தேசிய இனங்களுக்கிடையே முரண்பாடுகளை ஏற்படுத்தி ஒவ்வொரு இனக்குழுக்களையும் ஒழுங்கமைத்துக் கொள்கின்றனர்.[5] இக்கருத்தானது இலங்கையின் அனுபவத்தைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளது. ஏனெனில் 20 ஆம் நூற்றாண்டின் முதல் இரு தசாப்த அரசியல் செயற்பாடுகள் உயர்குழாம் தலைவர்களுக்கிடையலான அதிகாரப்போட்டியை வளர்த்ததோடு தமது அரசியல் நலன்களுக்காக இனங்களுக்கிடையே பகையையுணர்வை ஏற்படுத்தியதோடு இனங்களை அரசியல் மயப்படுத்தும் நிறுவனங்களையும் அமைத்துக் கொண்டனர்.

1931ஆம் ஆண்டு டொனமூர் அரசியலில் சுதேசிகளின் பங்கு அதிகரித்ததமையால் முதற்தடவையாக அரசியல் அபிவிருத்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இராஜரட்டைப் பகுதியில் கைவிடப்பட்ட குளங்களையும், கால்வாய்களையும் புனருத்தானம் செய்யும் முயற்சி மேற்கொள்ளப்பட்டன. இவற்றை மையமாகக் கொண்ட குடியேற்றங்ள் அமைக்கப்பட்டன. ஆற்று படி நில அபிவிருத்தித்திட்டங்கள், ஆற்றுத்திசை திருப்புத் திட்டங்கள் என்பன முதற்கட்டப்பணிகளாக மேற்கொள்ளப்பட்டன.[6] இதே காலத்தில் காணிப்பங்கீடு, விவசாய அபிவிருத்தி என்ற நோக்கத்தை அடைவதற்காக பல சட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. 1927 ஆம் ஆண்டு நில ஆணைக்குழு நியமிக்கப்பட்டு, 1935 ஆம் ஆண்டு

நில அபிவிருத்திச் சட்டம் உருவாக்கப்பட்டது. 1939ஆம் ஆண்டு நில அபிவிருத்திக்கு புதிய கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டது.[7] இவ்வாறான சட்ட ஏற்பாடுகளுக்கும், குடியேற்றக் கொள்கைகளுக்கு முன்னோடியாக இருந்தவர். முதலாவது காணி, விவசாய அமைச்சராக இருந்த டி.எஸ் சேனநாயக்கா. இவர் முன்னர் காணி ஆணைக்குழுவில் பணியாற்றிய அறிவும், அனுபவமும் உடையவராக இருந்தததமையால் தனது அமைச்சின் கீழ் விவசாயம், நீர்பாசனம், நிலஅளவை, காட்டுவளம், காணிக்குடியேற்றம் ஆகிய திணைக்களங்களை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார்.[8] இவருடைய அரசியல் நடவடிக்கைகளே நவீன குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுவதற்கும் குடியேற்றத்திட்டங்களை விரைவு படுத்துவதையும் ஊக்குவித்ததோடு குடியேற்றயுகம் ஒன்று ஏற்படவும் காரணமாயிற்று.

குடியேற்றதிட்டங்கள் என்பவை அபிவிருத்தியையும், சமூக மேம்பாட்டையும், தனியாள் விருத்தியையும் கொண்டதாக இருக்க வேண்டுமேயன்றி அரசியல் நோக்கம் கொண்டதாக அமையக்கூடாது. இலங்கை ஒற்றையாட்சி முறையின் கீழ் மத்தியமயமாக்கப்பட்ட அதிகாரங்களையும், மத்தியமயமாக்கப்பட்ட நிறுவனங்களையும் கொண்டுள்ள அரசாங்கமொன்று குடியேற்றங்களை உருவாக்குவதென்பது மிகவும் சுலபமான தொன்றாகும்.[9] இந்த வகையில் சுதந்திரத்தின் முன் ஆரம்பிக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்கள் பெரும்பான்மையினம் சார்பான மேம்பாட்டு நடவடிக்கைகளையே அரசாங்கங்கள் மேற்கொண்டு வந்தன. டொனமூர் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து அரசியல் பலமும், ஆதிக்கமும் பெரும்பான்மை யினரைச் சென்றடைந்ததோடு அவர்களின் எழுச்சியானது சிறுபான்மையினரின் பொருளாதார நலன்களுக்கெதிராகத் தோற்றம் பெற்றதோடு அவர்கள் அனுபவித்துவரும் பொருளாதார அனுகூலங்களை பெரும்பான்மையினமும் பெற வேண்டும் என்ற தொனியில் பொருளாதாரத் தேசிய வாதம் ஒன்றைக் கட்டியெழுப்ப முற்பட்டனர்.[10] டொனமூர் சீர்திருத்தத்தோடு இலங்கையில் தேசிய நோக்கோ, தேசிய பண்போ காணப்படாமல் வகுப்பு வாத சிந்தனைகளும், இனரீதியான உணர்வுகளும் மேலோங்கி முனைப்புடன் காணப்பட்டது. இது சர்வசன வாக்குரிமையோடு கூர்மையடைந்து காணப்பட்டது.[11] என்றும் அரசியல் அதிகாரம் பற்றிய அமைப்பிலும், சட்டவாக்கத்திலும் ஆதிக்கம் செலுத்துவதாக அமைந்துள்ளதோடு இதுதான் இனக்குரோதத்தின் அடிப்படையாக விளங்கியது.[12]

ஆகவே டொனமூர் காலத்தில் இருந்து ஒரு இன மேம்பாட்டிற்கான அரசியல் பொருளாதார சமூக நடவடிக்கைகள் ஆரம்பமாயிற்று எனலாம்.

பல் தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களானது மிகவும் அவதானமாகவும் சமத்துவத்தோடும், சமசந்தர்ப்பத்தோடும் மேற்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட இனத்தவருக்கு ஆதரவாக அல்லது சாதகமாக குடியேற்றங்கள் மேற்கொள்ளப்படுமாயின் அங்கு வாழும் ஏனைய இனத்தவர்கள் இலகுவில் உணர்ச்சி வசப்படவும், தாம் புறக்கணிக்கப்படுவதாக உணரவும் காரணமாகின்றது.[13] என்பதோடு ஆள்புலம் சார்ந்த தேசிய இனப்பிரச்சினை தோன்றவும் வழிவகுத்தது.

குடியேற்றம் என்பது ஓர் அரசியல் மட்டக் கொள்கையாக ஆரம்ப காலங்களில் இருந்தே பின்பற்றப்பட்டு வருகின்றன. இவை இலங்கையின் அரசியலில் பல பரிமாணங்களை ஏற்படுத்தி வருகின்றது.

ஈரவலயத்தில் இருக்கும் சனத்தொகை செறிவைக் குறைப்பது. உணவு உற்பத்தியை அதிகரிப்பதும் தான் அரசாங்கங்களின் முக்கிய நோக்கமெனக் கூறப்பட்டது. வரண்ட வலயத்தில் அரச ஆதரவோடு குடியேற்றங்கள் மேற் கொள்ளப்பட்டு வந்தன. 1930 களில் இருந்து அரசாங்க நிலங்களை காணிகளற்ற ஏழை விவசாயிகளுக்கு விவசாய நன்மைகளுக்காக வரண்ட வலயங்களில் குடியேற்றி வந்தனர்.[14] ஈரவலயத்தில் நிலப்பாற்றாக்குறை இருப்பதால் காணிகளற்ற விவசாயிகளுக்கு காணி வழங்குவது அதன் நோக்கமாக இருந்தது. ஆனால் உண்மை நிலையில் ஏற்கனவே வரண்ட வலயத்தில் காணிகளற்ற ஏழை விவசாயிகள் வேலையின்மை, நீர்ப்பானப் பற்றாக்குறை, மலேரியா தொற்றுநோயின் தாக்கம் ன்பவற்றால் அதிகளவு பிரச்சினைகளை எதிர்நோக்கினர்.

### வரண்ட வலயத்தில் காணிகளற்றோர் விதம் - 1946[15]

| | |
|---|---|
| மட்டக்களப்பு | -57.8% |
| யாழ்ப்பாணம் | -31.7% |
| புத்தளம் | -27.2% |
| வவுனியா | -25.6% |
| திருகோணமலை | -20 % |

(B.H. Famer 1957)

ஏற்கனவே வரண்ட வலயத்தில் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்க்கவோ, அம்மக்களுக்கு மாற்று வழிகளைப் பற்றிச் சிந்திக்காத தலைவர்கள் சிங்கள மக்களை வரண்ட வலயத்தில் குடியேற்றவும் அவர்களுக்கான பலவேறு அபிவிருத்தித் திட்டங்களை உருவாக்கிக் கொடுப்பதிலும் அதிக அக்கறை காட்டினர் என்பதை அவர்களுக்கு கொடுக்கப்பட்ட குடியேற்றத் திட்டங்களே சான்றாகும்.[16]

இலங்கையின் வரலாற்றை எப்போதும் மிகைப்படுத்தி நோக்கிய சிங்களத்தலைவர்கள் சிங்கள பௌத்தத்தின் பொற்காலத்தை மீண்டும் ஏற்படுத்துவதற்கான அரசியல் செயற்பாடுகளில் அதிக ஆர்வம் காட்டி வந்தனர். 1930களில் அரசுக்கழகத்தில் சுதேசிகளின் பங்கு அதிகரித்தமையாலும் மந்திரிசபையில் மந்திரிகளாக இருந்த இலங்கையர்களை வரண்ட வலயக் குடியேற்றங்களை அமைப்பதன் மூலம் நீர்பாசனங்களைப் புனருத்தானம் செய்வதோடு இராஜரட்டையில் சிங்கள நாகரிகத்தின் மேம்பாட்டை மறுபடியும் ஏற்படுத்துவதை அரசியல் நோக்கமாகக் கொண்டிருந்தனர்.[17] சிங்கள இனத்தின் வரலாற்றை மிகைப்படுத்திய தலைவர்கள் இலங்கையின் புராதன நாகரிகத்தின் மிக உன்னத நிலையை [18] இராஜரட்டையில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத்திட்டங்களினால் அடைந்து கொள்ள முடியும், என நம்பினர். இதன் காரணமாக குறுகிய இனவாத சிந்தனைகளோடு குடியேற்றங்களை விரைவுபடுத்தியதோடு பிரதேசங்களின் கட்டமைப்புக்களையும் மாற்றியமைத்தனர்.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் மூன்றில் ஒரு பகுதியை வடக்கு கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. இங்கு தமிழ் பேசும்மக்கள் செறிவாக வாழ்வதோடு மிகத் தொன்மையான வாழ்விடமாக இப்பிரதேசங்கள் காணப்படுகின்றது. குடியேற்றத்திட்டங்களை ஆதரிப்போர் முன்வைக்கும் வாதம், இலங்கையில் விகிதாசாரமற்ற ஒரு பங்கையே வடக்கு, கிழக்கு மாகாணங்கள் கொண்டுள்ளன. மொத்த சனத்தொகையில் 14.7 சதவீதமானோர் மொத்த நிலப்பரப்பில் 28.4 சதவீதமான பிரதேசத்தில் வாழ்கின்றனர்.[19] எனவே பெரும்பானன்மையான மக்கள் மிகுதி மூன்றில் - இரண்டு பங்கு நிலப்பரப்பையே வாழ்விடமாகக் கொண்டுள்ளனர். இதில் எந்தவிதமான நியாயத்தன்மையும் காணப்படவில்லை என்பது அவர்களின் நியாயமாகும். ஆனால் உண்மை நிலை அதுவல்ல. வடக்கு கிழக்கு மாகாணங்களுக்குப் புறம்பாக வரண்ட வலயத்தாழ் நிலத்தில் காணப்படும் அனுராதபுரம், பொலநறுவை, மொனறாகல, அம்பாந்தோட்டை, மாவட்டங்கள் மொத்த சனத்தொகையில் 11.1 சதவீதத்தையும், மொத்த நிலப்பரப்பில் 28.5 சத வீதத்தையும் கொண்டுள்ளன.[20] ஆகவே சிங்களவர்களை செறிவு குறைவாக வாழ்கின்ற வரண்ட வலயங்களில் குடியேற்றங்களை மேற்கொள்ளாமல் திட்டமிட்ட வகையில் தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்ற மரபு வழிப்பிரதேசங்களில் அரச ஆதரவோடு திட்டமிட்ட குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவது அரசியலில் இன மேலாதிக்க வாதத்தின் நடவடிக்கையே அன்றி வேறு ஏதுவுமில்லை.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற குடியேற்றத் திட்டங்கள் மிகப்பெரியளவில் அரசியலில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. பல்தேசிய இனங்கள் வாழுகின்ற நாடுகளில் மேற்கொள்ளப்படுகின்ற குடியேற்றத் திட்டங்கள் மிக நிதானமதாகவும், அரசியல் நோக்கம் அற்றதாகவும், இனப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தாமலும், இருப்பது இனங்களின் ஐக்கியத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டிற்கும் உகந்ததாக அமையும். மாறாக இனப் பரம்பலில் மாற்றங்கள் ஏற்படுமாயின் தேசிய ஒருமைப்பாட்டிற்கான கட்டுமாணம் சிதைந்து விடும். குடியேற்றத்திட்டங்கள் அமைக்கப்படுவதை எதிர்க்க முடியாது. ஆனால் இனப்பரம்பலை மாற்றும் நோக்கோடு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளைத் தடுத்தேயாக வேண்டும்.[21] இந்தியாவில் பஞ்சாப்பில் 1886இல் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பிக்கப்பட்டன. இவை இனப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தும் அரசியல் நோக்கம் கொண்டதல்ல.

இலங்கையரசியலில் சிங்கள மக்களின் வாதம் தென் இலங்கையில் இனப் பரம்பலை மாற்றும் நோக்கத்துடன் தமிழர்கள் அங்கு குடியேறுகின்றார்கள். தமிழ்ப் பிரதேசங்களில் சிங்களவர்கள் குடியேறுவதை தமிழர்கள் தடுக்க முடியாது.[22] ஆனால் இது உண்மைக்குப் புறம்பான வாதமாகும். ஏனெனில் தென் இலங்கையில் தமிழர்கள் குடியேறியதன் மூலம் இனப்பரம்பலில் பாரிய மாற்றங்கள் எதுவும் ஏற்படவில்லை, என்பதோடு, அரச பணியாளர்களும். வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டோரே தென் இலங்கை நோக்கிச் சென்றனர். ஆனால் தமிழ்ப் பிரதேசங்களில் மேற் கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்கள் கொள்கை ரீதியாக அரசியல் நோக்கமும், இனத்துவ சிந்தனையும் கொண்டு அரசாங்க

ஆதரவோடு பாரிய குடியேற்றங்களை அமைத்ததன் மூலமாக இனப்பரம்பலில் மாற்றங்களை ஏற்படுத்தினர். வடமாகணத்தை விட கிழக்கு மாகாணமே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன்[23] இனப்பரம்பல் சிதைக்கப்பட்டு சிங்களவர்களை பெரும்பான்மையாக கொண்ட மாவட்டங்கள் [24] உருவாக்கப்பட்டு வருகின்றன.

இரண்டாம் குடியரசு அரசியல் திட்டங்களின் அடிப்படையுரிமைகள் என்ற அத்தியாயத்தின் 14 (1) ஏ இல் இலங்கை முழுவதும் தடையின்றி நடமாடுவதற்கும் தான் விரும்பும் இடத்தில் வசிப்பதற்குமான சுதந்திரம்[25] வரையறை செய்யப்பட்டுள்ளது. இது ஒரு பிரஜையினது சுதந்திரமாகும். ஆனால் பதவியில் இருக்கும் அரசாங்கங்களால் திட்டமிடப்பட்டு, அரச நிதியுதவியோடு அதிக எண்ணிக்கையிலானோரை அவர்களின் விருப்பங்களுக்கு மாறாக குடியமரச் செய்வது அடிப்படை மனித உரிமைமீறல்கள் என்பதோடு அரச இயந்திரத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையுமாகும்.

கிழக்கு மாகாணத்தில் இனப்பரம்பலில் ஏற்பட்ட சிதைவில் பரம்பலை பின்வரும் புள்ளி விபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

**கிழக்கு மாகாணத்தில் - 1921 -1981**[26]

| | சிங்களவர் | | தமிழர் | |
|---|---|---|---|---|
| | 1921 | 1981 | 1921 | 1981 |
| திருகோணமலை | 4.5% | 33.6% | 53.2% | 33.8% |
| மட்டக்களப்பு | 1.9% | 03.2% | 68.5% | 70.8% |
| அம்பாறை | 8.2% | 37.6% | 30.5% | 20.1% |

(S.Bastian -1997)

கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை மாவட்டத்தில் 1946ஆம் ஆண்டில் 15.3 சதவீதமாக சிங்களவர் தொகை காணப்பட்டது. 1981இல் 33.6% அதிகரித்துள்ளது.[27] இதே போன்று அம்பாறை தனி மாவட்டமாக உருவாக்கப்பட்ட பின் சிங்களவர்களின் எண்ணிக்கை உயர்ந்தது. இங்கு அவதானிக்கக்கூடிய சிறப்பம்சம் ஒன்று தமிழர்களுக்கும் முஸ்லீம்களும் இயற்கையோடு இணைந்த சனத்தொகை அதிகரிப்பு வீதத்தினைக் கொண்டிருக்க, சிங்களவர்களின் சனத்தொகை அதிகரிப்பு வீதம் அபரிதமானதாக அதாவது செயற்கை அதிகரிப்பு காணப்படுகின்றது. மற்றையது கிழக்கில் சிங்களவரின் பரம்பலை அதிகரிக்க கிராமிய விஸ்தரிப்பு, மாவட்டங்கள், மாகாணங்கள் போன்றவற்றின் எல்லைகளை மாற்றியமைத்தல் போன்ற தந்திரங்களைப் பயன்படுத்தி 1881இல் 4.5 சதவீதமாக இருந்த சிங்களவர்களை 1981இல் 24.9 சதவீதமாகவுள்ளர். தமிழர்கள் 61.3 சமவீதத்தில் இருந்து 41.9 சதவீதமாக குறைவடைந்துள்ளனர். 1980களின் பின் ஏற்பட்ட பல்வேறு அரசியல் அனர்த்தங்களால் கிழக்கின் சனத்தொகைப் பரம்பல் மேலும் மோசமடைந்தே காணப்படும் என்பது உறுதி.

தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்டு வந்த அரச ஆதரவுடனான குடியேற்றத் திட்டங்களினால் இங்கு பாரம்பரியமாக வாழ்ந்து வந்த தமிழ் பேசும் மக்களின் அரசியல் பலத்தையும், செல்வாக்கையும் அழிக்கும் மற்றுமோர் அரசியல் நடவடிக்கையாக வெவ்வேறு காலப்பகுதியில் கொண்டு வரப்பட்ட தேர்தல் தொகுதி நிர்ணயங்கள் அமைகின்றன. டொனமூர் சீர்திருத்தத்தின் கீழ் தமிழ்மக்களின் பிரதிநிதித்துவம் 5:1 என குறைக்கப்பட்டது.[29] பின்பு 1946 ஆம் ஆண்டு சுதந்திர இலங்கைக்கான தொகுதி நிர்ணயத்தின் போது வடக்கில் ஒன்பது தொகுதிகளும், கிழக்கில் ஏழு தொகுதிகளும் நிர்ணயிக்கப்பட்டன. இங்கு குறிப்பிடத்தக்க அம்சம் 1947இல் இருந்து 1956 வரை தமிழ், முஸ்லிம் பிரதிநிதிகளே பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டனர்.[30] 1956 தேர்தலின் போது சிங்களம் மட்டும் என்ற கொள்கையால் வடக்கு கிழக்கில் எந்தவொரு சிங்கள வேட்பாளர்களும் போட்டியிடவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அரசியல் நலன்களுக்காக வாக்காளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது. புதிய தொகுதிகளை உருவாக்கி சிங்களப் பிரதிநித்துவத்தை அதிகரிப்பதும் அரசியல் தலைவர்களின் நீண்டகால அரசியல் கொள்கையாக இருந்து வந்துள்ளன. என்பதை அவர்களின் செயற்பாடுகள் நிரூபிக்கின்றன. 1959ஆம் ஆண்டு தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் தொகுதி நிர்ணயத்தோடு அம்பாறை சிங்களவர்களின் தொகுதியாக மாறிவிட்டது.[31] 1974 தொகுதி நிர்ணயத்தின் பின் கிழக்கு மாகாணத்தின் பிரதிநிதித்துவத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டன. திருகோணமலை மாவட்டத்தில் 1977இல் சேருவெல என்ற தனிச்சிங்கள தொகுதி உருவாக்கப்பட்டது. அம்பாறை மாவட்டம் 1981ஆம் ஆண்டு திகாமடுவல்ல என்ற சிங்களத் தேர்தல் மாவட்டமாக உருவாக்கப்பட்டது. குடியேற்றத் திட்டங்களினால் வாக்காளர்களின் பரம்பலிலும் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இன்று கிழக்கில் தமிழ்ப் பிரதிநிதித்துவம் முழுமையாக அழியும் நிலையிலேயே காணப்படுகின்றது. திருகோணமலைத்

தொகுதி உருவாக்கப்பட்டதில் இருந்து தமிழ் பிரதிநிதித்துவத்தையே கொண்டிருந்த இத் தொகுதி[32] இன்று முதன் முறையாக ஒரு பிரதி நிதிகூட தெரிவு செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதென்றால் இது குடியேற்றத் திட்டங்களின் நீண்ட கால செயற்பாட்டின் வெற்றியென்றே கூற முடியும். இந்த அனுபவம் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் மக்களுக்கும் பேராபத்தாகவே அமையப்போகின்றது.

தமிழ்ப் பிரதேசங்களில் வெவ்வேறு பெயர்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த குடியேற்றத்திட்டங்களினால் தமிழர்கள் மரபு ரீதியான வாழ்விடங்களில் சிறுபான்மையோராகி விடுவோமோ என அச்சம் கொண்டனர். இதன் அரசியல் பரிமாணம் தமிழர்கள் தமது இனத்துவ அடையாளங்களைப் பற்றியும், அதற்கான அரசியல் மட்ட அங்கீகாரம் பெறவும் நீண்டகாலம் போராடவேண்டியதாயிற்று, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனம், அவர்களுக்கான மரபுவழி வாழ்விடம் என்ற கொள்கைகளை சிங்களவர்கள் நிராகரிக்கின்றனர். இலங்கையை சிங்களவர்கள் ஒரு தேசத்தின் தாயகமாகக் கருதுகின்றனர். ஏனெனில் சிங்களவர்களே ஆதியில் குடியேறியவர்கள், பௌத்தமே அவர்களுக்கு இத் தாயகத்தை வழங்கியது. ஆகவே தமிழர்களின் பூர்வீகத்தாயகக் கோட்பாட்டை நிராகரிக்கின்றனர்.

தமிழர்களின் பூர்வீகத் தாயகக் கோட்பாட்டை எல்லாச் சிங்களத் தலைவர்களும் நிராகரிக்கவில்லை.[33] பிரதான சிங்களத் தலைவர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான அங்கிகாரத்தினையும் வழங்கியுள்ளனர். ஆனால் சிங்களத் தீவிரவாதிகளின் எதிர்பால் அவை நடைமுறைப்படுத்த முடியவில்லை. 1957ஆம் ஆண்டு பண்டா - செல்வா ஒப்பந்தத்தில் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் அமைக்கப்படும் பிராந்திய கழகங்களில் மேற்கொள்ளப்படும் குடியேற்றத் திட்டங்களுக்கான நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு இக் கழகங்களிடம் அதிகாரம் வழங்கப்பட்டிருந்தது. இவ்வொப்பந்தத்தில் தனியான பிராந்திய சபைகளால் நிருவகிக்கப்பட்ட பகுதிகளில் தமிழ் மொழி பயன்படுத்தப்பட அனுமதித்ததன் மூலம் தமிழர் ஓர் தனித்துவமான தேசிய இனமாகவும் தமிழ்ப்பகுதிகளை பூர்வீகத்தாயகமாகவும் ஏற்றுக் கொண்டார்.

1965ஆம் ஆண்டு டட்லி சேனநாயக்கா - செல்வநாயகம் உடன்படிக்கை மேற்கொள்ளப் பட்டது. இந்த உடன்படிக்கையில் வடக்குகிழக்கு மாகாணங்களில் தமிழிலேயே நிர்வாகம் நடப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டது. குடியேற்றத் திட்டங்களை கட்டுப்படுத்தவும், தமிழர்களின் பூர்வீகத்தாயகத்தைப் பாதுகாக்கவும், காணிப்பங்கீடு, காணி அபிவிருத்தி விதி முறைகள் மாற்றியமைக்கவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது. குடியேற்றத்திட்டங்களில் காணி வழங்கப்படும் போது

(அ) வடகிழக்கு மாகாணங்களிலுள்ள காணிகள் அம்மாகாணத்திலுள்ள காணியற்றவர் களுக்கே முதலிடம் வழங்கப்பட வேண்டும்.

ஆ). இரண்டாவதாக வடகிழக்கு மாகாணங்களில் வசிக்கும் தமிழ் பேசும் மக்களுக்கே வழங்கப்பட வேண்டும்.

இ). மூன்றாவதாக இலங்கையின் ஏனைய பகுதிகளிலுள்ள தமிழ் பேசும் இனத்தவர்களுக்கே முதலிடம் கொடுத்து ஏனையோருக்கு வழங்கலாம்.

குடியேற்றத் திட்டங்களினால் தமிழ் பேசும் மக்களுக்கு ஏற்பட்ட, ஏற்படப்போகின்ற அரசியல், பொருளாதார, சமூக விளைவுகளைப் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும், அறிவையும் ஏற்படுத்தியவர்களை சமஸ்டிக்கட்சியினரே இவர்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் இருந்து குடியேற்றத் திட்டங்களைக் கண்டித்தும், அதற்கு எதிராகப் பிரச்சாரங்களையும் போராட்டங்களையும் மேற்கொண்டு வடக்கு கிழக்கு பிரதேசங்கள் தமிழர்களின் பாரம்பரியத் தாயகம் என்ற கோட்பாட்டை பிரபலப்படுத்தியதோடு அதைப் பாதுகாக்கவும் முற்பட்டனர். செல்வநாயகம் கட்சியின் தலைமைப் பேருரையில்

''அரசாங்கத்தின் குடியேற்றக் கொள்கையானது எல்லாவற்றுள்ளும் பார்க்க தமிழ் பேசும் மக்களை கூடிய ஆபத்தை ஏற்படுத்தக் கூடியதாய் இருக்கிறது. தமிழ்பேசும் பிரதேசத்தை குறைப்பதற்கே அரசாங்கம் அநியாயமான முறையில் தன் அதிகாரத்தை உபயோகிக்கின்றது. சில வருடங்களுக்கிடையில் இந்நாட்டிலே தமிழ்ப் பிரதேசம் இல்லாதொழியும்''[34]

என்று கூறியதன் மூலம் குடியேற்றத்திட்டங்களினால் ஏற்படப் போகின்ற பாரிய தீய விளைவுகளை எதிர்வு கூறினார்.

சம்ஸ்டிக்கட்சியினர் தமது மாநாட்டுப் பேருரைகளிலும், மாநாட்டுத் தீர்மானங்களிலும், தேர்தல் பிரசாரங்களிலும் குடியேற்றத் திட்டங்கள் பற்றிய விடயத்திற்கு முன்னுரிமை வழங்கி வந்தனர். இதை பிரிதோர் வகையில் கூறுவதாயின் தனது கால் நூற்றாண்டு அரசியல் நடவடிக்கைகளின் போது தமிழ்த் தேசிய இனத்தின் பிரிக்க முடியாத அங்கமாக வாழ்விடத்தை பாதுகாக்கவே அதிக காலம் செலவிட்டது. ஆனால் அரச இயந்திரத்தினால் முடுக்கிவிடப்பட்டிருந்த குடியேற்றத் திட்டங்களை கட்டுப்படுத்த முடியாத நிலையில் தமிழர்களின் பாரம் பரியத் தாயகத்தைப் பாதுகாப்பதற்கு 'ஈழம்' என்ற தனிநாட்டுக் கோரிக்கை முன் வைக்கப்பட்டது. இது இலங்கையின் அரசியலில் வேறுபட்ட அரசியல் பரிமானத்தை வெளிப்படுத்தி நிற்கின்றது.

குடியேற்றப் பிரச்சினைக்கு ஒப்பந்தங்களின் அடிப்படையிலோ , புரிந்துணர்வின் அடிப்படையிலோ தீர்வு காண முடியவில்லை. தமிழர்கள் மத்தியில் பிரிவினைக் கோரிக்கை எழுந்த போது முதன் முறையாக சிங்கள அரசியல் கட்சியொன்று தேர்தல் விஞ்ஞானபனத்தில் குடியேற்றப் பிரச்சினைக்கு இடம் கொடுத்தது. 1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில்

> சிறுபான்மையோருக்குப் பிரச்சினைகள் உண்டு அவற்றுள் குடியேற்றம், காணிப் பகிர்வு என்பனவும் ஒன்றாகும்.[35]

என கூறியதன் மூலம் தேசிய அளவிலான பிரச்சினைகயாக மாறிவிட்டது.

பதவியியல் இருந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் சிறுபான்மையோரின் பிரச்சினை களுக்குத் தீர்வாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அமைத்தது.[36] இச் சபைகள் மூலம் தமிழ் பிரதேச அபிவிருத்தியையும், தமிழ் பிரதேசப்பாதுகாப்பையும் ஏற்படுத்த முடியுமென்ற கருத்து தமிழ் மிதவாதத் தலைவர்களால் வலியுறுத்தப்பட்டு வந்து. இச்சபைகள் மூலம் பாரம்பரிய தமிழ்ப் பிரதேசத்தைப் பாதுகாப்பதும், மாவட்டமட்ட அபிவிருத்தியை ஏற்படுத்துவதும் இதன் இரு பிரதான நோக்கங்களாகும். ஆனால் உள்ளூர் மட்டப் பிரச்சினைக்கு மேலாக தேசிய மட்ட பிரச்சினை என்ற நிலையை அடைந்த போது சிறுபான்மையோர் பிரச்சனைக்கோ அல்லது குடியேற்றப் பிரச்சனைக்கோ தீர்வாக அமையமுடியவில்லை. என்பதை பிற்கால தோல்விகள் உணர்த்தி நிற்கின்றன.

இலங்கையின் இனப்பிரச்சினையானது தேசிய பிரச்சினை என்ற எல்லையைத் தாண்டி பிராந்திய மட்டத்திலான பிரச்சனையாக பிரிவடைந்த போது இந்திய அரசின் தலையீடு என்பது தவிர்க்க முடியாததாயிற்று. இந்திய அரசின் மத்தியஸ்த்தத்தோடு தீவிரவாத இளைஞர் அமைப்புக்களும், மிதவாத தமிழ்த் தலைவர்களும் இலங்கை அரசின் பிரதிநிதிகளோடு 1985ஆம் ஆண்டு திம்புவில் பேச்சுவார்த்தையின் போது நான்கு முக்கிய அம்சங்களை வலியுறுத்தினர். ஒன்று இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய தாயகமாம் வடக்கு கிழக்கு பிரதேசங்களை அங்கரிக்க வேண்டும் என இந்திய மட்டத்தில் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டது. ஆகவே குடியேற்றத் திட்டங்களின் அரசியல் பரிமாணம் பிராந்திய மட்டத்தில் தாக்கங்களை ஏற்படுத்தியது.

இந்திய அரசின் நேரடி அரசியல் தலையீட்டினால் 1987 இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது.[37] இவ் ஒப்பந்தத்தில் இலங்கைத் தமிழர்களை தேசிய இனமாகவும், பாரம்பரிய வாழ்விடம் வடகிழக்கு பிரதேசங்களே என்பதை இரு நாடுகளும் ஏற்றுக் கொண்டன. இலங்கை அரசாங்கம் இதே ஆண்டு அரசியல் யாப்பில் 13வது திருத்தச் சட்டத்தில் காணி அதாவது காணிமீதான உரிமை, காணிமாற்றம், காணி அபிவிருத்தி யென்பன மாகாண சபைகளுக்குரிய விடயமாக அதிகாரபரவலாக்கத்தினால் வழங்கப்பட்டது.[38] இதில் இலங்கை அரசாங்கத்தின் தேவைக்கான காணிகள் எவ்வித மட்டுப்படுத்தலுமின்றி அரசாங்கம் பயன்படுத்தும் மாகாணசபைகள் தமது தேவைக்களுக்காகக் காணிகள் பயன்படுத்தும் முன் ஜனாதிபதியின் சம்மதம் அவசியமானதென குறிப்பிட்டிருப்பதன் மூலம் தொடர்ந்தும் மத்திய அரசே காணிக்கொள்கைகளில் உறுதியாக இருப்பதை மீண்டும் வலியுறுத்துகின்றது. மாகாணங்களுக் கிடையிலான நீர்பாசனம், காணி அபிவிருத்தித் திட்டங்களும் மத்திய அரசிடமே இருக்கும்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங் கத்தால் பிரேரிக்கப்பட்டிருக்கும் மாற்றீடு செய்வதற்கான சட்ட மூலத்தின்[39] அத்தியாயம் இருபத்து மூன்றில் அரச காணி, நீர்நிலைகள் மற்றும் கனிப்பொருட்கள் தொடர்பாக ஏற்பாடுகளை செய்துள்ளன. இச்சட்டத்திலும் பிராந்திய கழகங்களிடம் இருக்கும் அரச காணிகளையும், நீர்நிலைகளையும் மத்திய அரசே தொடர்ந்தும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கின்றது.

ஆகவே இறுதியாக நோக்குகின்ற போது இருபதாம் நூற்றாண்டின் மூன்றாவத தசாப்பத்தில் தோற்றம் பெற்ற அரச ஆதரவோடான குடியேற்றத் திட்டங்களும் அவற்றின் அரசியல் பரிமாணங்களும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இலங்கையின் முதலாவது விவசாய காணியமைச்சராக இருந்த சேனநாயக்காவில் தொடங்கி இன்று பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தால் முன் வைக்கப்பட்டிருக்கும் யாப்புக்கான சட்டமூலம் வரை இப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேயில்லை.

உள்நாட்டு விவசாய அபிவிருத்தி, சுயதேவைப் பூர்த்தி என்ற இலக்கை அடையப் போவதாக கூறி, பொருளாதார, சமூக மட்டங்களில் நியாயங்களை முன்வைத்தாலும் குடியேற்றத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இருந்து எழுப்பப்படும். கேள்வி சமூக, பொருளாதார அபிவிருத்தியை அடைந்துனவா? என்றால் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளுக்கு ஏற்ப அபிவிருத்தியடையவில்லை. என்பதே பதில். குடியேற்றத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட காலங்களில் இருந்து அரசியல் நோக்கங்களே இதற்குள் மறைந்திருந்தது. ஒற்றையாட்சின் கீழ் மத்தியமயமாக்கப்பட்ட அதிகார அமைப்பையும், ஆட்சியமைப்பதில் தனித்து ஒரு இனம் தொடர்ந்தும் ஆதிக்கம் செலுத்துவது, மிகைப்படுத்தப்பட்ட வரலாற்றை நியாயப்படுத்துவது, இனமேலாதிக்கத்தை ஏற்படுத்த ஏனைய இனத்தவர்களின் இனத்துவ அடையாளங்களை அழிப்பது போன்ற அரசியலில் குறுகிய சிந்தனைகளும், இனவாத நோக்கங்களுமே குடியேற்றத் திட்டங்களினால் எழுந்த பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியாத நிலையை ஏற்படுத்தி வருகின்றன. மறுபுறம் பாதிக்கப்பட்டோர், உரிமைகளை இழந்தோர் சனநாயக கட்டமைப்புக்குள் நின்று உரிமைகளை வென்றெடுக்க முடியாமல் தீவிர மார்க்கமான ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தன் மூலம் பிராந்திய அரசின் தலையீட்டிற்கும் பின்னர் சர்வதேச நாடுகளின் தலையீட்டிற்கும் பின்னர் சர்வதேச நாடுகளின் மத்தியஸ்தத்திற்குமான பிரச்சினையாக காணப்படுகின்றது.

## NOTES AND REFEREENCES

01. Arasaratham. S ; Ceylon ,New Jersey, Princeton Hall, 1964, P: 124

02. Ibid ; P: 108

03. Manogaran. C ; Ethnic conflict and reconcilation in Srilanka, University of Hawai Press, Honolulu, 1987, P: 84]

04. Balakrishnsn. N ; `Some Issues of a Divided polity in Srilanka, Presidential Addresses - 1992, Jaffna Science Association, 1993, pp: 3-6

05. Brass, P.R ; Ethnicity and Nationalism, Theory and comparison. sage publication, New Delhi, 1991, pp: 69 -70

06. Famer, B.H ; Pioneer peasant colonization in Ceylon. Oxford University press, London, 1957, pp: 142 - 143.

07. Ibid ; pp: 146 - 147

08. Ibid ; pp:144 - 145

09. Bastian. S ; Control of state land - the Devolution debate; Sri Lanka: the Devolution debate, International Centre for ethnic sudies, Colombo, 1997, pp: 63 - 65.

10. Manogaran. S ; Op cit, p: 34.

11. Russell. J ; Communal Politics under the Donoughmore constitution, 1931 - 1947, Tisava Prakasakayo Ltd, Colombo, P: 19.

12. Balakrishnan. N. ; Op . cit. pp: 6-7.

13. Bastian. S ; Op cit, P: 67

14. Manogaran. S ; Op. cit, P: 88

15. Famer, B.H ; Op cit, P 66

16. வரண்ட வலயத்தில் அமைக்கப்பட்ட குடியேற்றத்திட்டங்களில் 44 குடியேற்றக் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இவற்றுள் 38 சிங்களக்குடியேற்றங்களும், 06 தமிழ் பேசும் மக்களின் குடியேற்றங்களுமாகும். சிங்களவர்களில் பெரும்பான்மையோர் வெளி மாவட்டங்களில் இருந்து குடியேற்றப்பட்டவர்கள்.

17. Manogaran. S ; Op : cit ,90

18. Bastion. S ; Op cit, P: 61

19. மார்க்கா நிறுவனம்: காணியும் சனத்தொகையும், பத்திரம் 1, கொழும்பு, 19995, பக்கம்: 1

20. மேற்படி : பக்கம்: 2.

21. Famer. B.H. ; Op : cit, p:113.

22. Bastian. S. ; Op cit, pp: 86 - 87.

23. Bastian. S ; Op: cit, pp: 63-64.

24. மட்டக்களப்பு மாவட்டத்தில் தென்பகுதியான அம்பாறை 1961இல் தனி மாவட்டமாக மாற்றப்பட்டது. ஏனைய சிங்கள மாவட்ட எல்லைகளோடு விஸ்தரிக்கப்பட்டு சிங்கள நிர்வாக மாவட்டமாக உருவாக்கப்பட்டது.

25. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு - 1978, பக்கம் : 6.

26. Bastion .S ; Op cit, P: 67

27. Manogaran. S. ; Op cit , PP: 90 - 92

28. Ibid ; pp: 90 - 93

29. Arasaratnam. ; 'Nationalism in Srilanka and the Tamils'; in M. Roberts (Ed) Collective Identities Nationlism and protest in Moderm Srilanka, Marge Institute, Colombo, 1979, pp: 501 -502.

30. Kearney, Robert.il ;Communalism and Ianguge iun the politics of ceylon, Duke University Priss, Darham, 1967, P: 91

31. I bis ; p: 92

32. திருகோணமலைத் தேர்தல் தொகுதி உருவாக்கப்பட்ட காலங்களில் இருந்து தமிழ் பிரதிநிதியே பாராளுமன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டு வந்தனர். 2000ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் ஒரு தமிழ் பிரதிநிதி கூட தெரிவு செய்யப்படவில்லை.

33. 1957 பண்டா - செல்வா ஒப்பந்தம்
1965 டட்லி - செல்வா ஒப்பந்தம்
1987 இந்திய - இலங்கை ஒப்பந்தம் இவை இலங்கைத் தமிழர்களை தேசிய இனமாகவும் வடக்கு கிழக்கு மாகாணங்களை மரபு வழித் தாயகமாகவும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

34. செல்வநாயகம், எஸ். ஜேவி, 'தீர்க்க தரிசனமிகு தலைலதைப் பேருரை-1949, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி வெற்றி விழாமலர், 1974, பக்கங்கள்: 8-9

35. ஐக்கிய தேசியக் கட்சி வெளியீடு; நீதியும் சுதந்திரமும் நிலவும் ஒரு சமுதாயத்தை சிருஷ்டிப்பதற்கான செயற்திட்டம், கொழும்பு-1977, பக்கம்: 10

36. Balakrishnan, Distrct Dlvelopment Councils and Tamil Politics (Srilanka) The Srilanka Journal of South Asian Studies, Vol; 2 No:2 December, 1982, pp:54-56

37. Indian and foreign Review. vol:20 No23, September, 1987. pp 6-7

38. 13வது அரசியல் திருத்த சட்டம்
1978 ஆம் அண்டு இரண்டாம் குடியரசு அரசியல் திட்டம்

39. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பை நீக்குவதற்கும் மாற்றீ மாற்றீடு செய்வதற்குமான சட்டமூலம். (நீதி அரசியலமைப்பு அலுவல்கள் இன அலுவல்கள், தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சரும் பிரதியமைச்சருமானவரால் 2000 ஒகஸ்ட் மாதம் 03ம் திகதி சமர்ப்பிக்கப்பட்டது) பக்கங்கள்: 107-111)